**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | Village: | |
| Preliminary Register | : CC.926/2019 | Age | :43 |
| Sessions | : | Taluk | : |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Religion | : |
| Name | : ஜெகபர்நிஷாபேகம் | | |
| Father's/Husband's Name | : முஜாஹிதின் | | |
| Nationality | : Indian | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 09.10.2024.**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது கொரநாட்டுக்கருப்பூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 1ம் எதிரி முஜாஹிதின் எனது கணவர் ஆவார். 3 வது எதிரி தாஜூநிஷா எனது மாமியார் ஆவார். 1, 3 எதிரிகள் இறந்துவிட்டார்கள். கடந்த 30.09.1999 ம் தேதி எனக்கும் 1ம் எதிரிக்கும் இடையே திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு எனது மாமியார் வீட்டில் குடும்பம் நடத்தி வந்தோம். திருமணத்தின்போது 10 பவுன் தங்க நகையும், ரூ.30,000/-த்திற்கு சீர்

சாமான்களும், ரொக்கமாக ரூ.45,000/-மும் சீதனமாக கொடுக்கப்பட்டது. திருமணத்திற்கு பிறகு எனது நாத்தனாரான ஆஜர் எதிரி மற்றும் மாமியார் மேலும் 30 பவுன் தங்க நகைகள் கொடுக்குமாறு கேட்டார்கள். நான் கொடுக்கவில்லை என்பதால் ஆஜர் எதிரியும் எனது மாமியாரும் என்னை வக்கத்தவள் என்று கூறி தொடர்ந்து டார்ச்சர் செய்து வந்தார்கள். திருமணத்தின்போது எனக்கு போடப்பட்ட 10 பவுன் தங்க நகைகளை எதிரிகள் வாங்கி கொண்டார்கள். அதன் பிறகு எனது கணவர் வெளிநாட்டிற்கு பயணம் சென்ற போது அதற்காக என்னிடம் ரூ.50,000/- பணம் கேட்டு எனது வீட்டிற்கு சென்று வாங்கி வருமாறு சொன்னார்கள். நான் எனது வீட்டில் வசதியில்லை என்று சொன்னேன். அதற்கு எதிரிகள் மூவரும் பணம் கொடுக்க முடியவில்லை என்றால் இங்கிருக்காதே உனது வீட்டிற்கு சென்றுவிடு என்று சொல்லி டார்ச்சர் செய்தார்கள். அதன் பிறகு பணம் வாங்கி கொடுக்கவில்லை என்பதற்காக எனது கணவர் என்னை எனது வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து என்னை ரோட்டில் விட்டு விட்டு சென்றுவிட்டார். அப்போது நான் கர்ப்பமாக இருந்தேன். எனது கணவர் வெளிநாடு சென்றது குறித்து எனக்கு எந்த தகவலும் சொல்லவில்லை. எனது கணவர் எங்கிருந்தார் என்பது எனக்கு தெரியவில்லை. அதன் பிறகு 4 வருடங்கள் கழித்து ஜமாத் மூலமாக என்னை எனது கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு எனது கணவர் நல்லவர் போல இருந்தார். மறுபடியும் வெளிநாடு சென்றுவிட்டார். அதன் பிறகு எனது மாமியாரும் நாத்தனாரும் 30 பவுன் நகை கேட்டு டார்ச்சர் செய்து வந்தார்கள். இருவரும் என்னை வக்கத்தவள் என்றும், வசதியில்லாத வீட்டில் பெண் எடுத்துவிட்டோம் என்றும் கூறினார்கள். கடந்த 2009 ம் வருடம் எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. பையன் பிறந்த பிறகு எனது கணவர் நல்லவர் போல இருந்தார். மாமியார் மற்றும் நாத்தனார் எனது கணவரை எனக்கு செலவுக்கு கூட பணம் கொடுக்கவிடமாட்டார்கள். எனது கணவரை என்னை வெளியே அழைத்து செல்ல கூட

விடமாட்டார்கள். எதையாவது பேசி பிரச்சனை செய்து கொண்டே இருப்பார்கள். 2014 ம் ஆண்டு எனக்கு பெண் குழந்தை பிறந்தது. அதன் பிறகு எனது நாத்தனார் தூங்கிய பிறகுதான் நான் தூங்க வேண்டும் என்றும் அவரது பையன் தூங்குவதற்காக எனது குழந்தை அழக்கூடாது என்று கூறியும் தொடர்ந்து எனக்கு வேலைகள் கொடுத்தும் எனது நாத்தனார் டார்ச்சர் செய்து வந்தார். எனது குழந்தை அழுது கொண்டிருப்பதாக கூறி வீட்டின் கொல்லைபுறத்தில் என்னை படுக்க வைத்தார்கள். அதன் பிறகு என்னால் டார்ச்சர் தாங்க முடியாமல் அங்கு இருக்க முடியாமல் நான் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது கணவரும் வெளிநாட்டில் இருந்து எனக்கு பணம் அனுப்புவதில்லை. எனது நாத்தனார் அவரை பணம் அனுப்பவிடாமல் செய்து விட்டார். தற்போது வரை வயதான அப்பாதான் எங்களை பராமரித்து வருகிறார். அதன் பிறகு கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் கொடுத்ததுதான். ( மேற்படிபுகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எனது கணவர் எந்த தேதியில் இறந்தார் என்றால் 14 ம் தேதி 1 ம் மாதம் இறந்தார். 2020 ம் ஆண்டா 2021 ம் ஆண்டா என்று சரியாக தெரியவில்லை. எனது கணவர் எங்கு இறந்தார் என்றால் எங்கு இறந்தார் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் இறப்பில் நான் கலந்து கொண்டேனா என்றால் அவர் இறந்தது எனக்கு தெரியாது. கொரநாட்டுக்கருப்பூரிலிருந்து எனது கணவர் இருக்கும் திருமங்கலக்குடிக்கு சுமார் 5 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சுமாராக 10 கி.மீ. தூரம் இருக்கும். சரியாக எனக்கு தெரியவில்லை. கொரநாட்டுக்கருப்பூர் மற்றும் திருமங்கலக்குடியில் ஜமாத் உள்ளது என்றால் சரிதான்.

2. எங்கள் திருமணம் இரு ஜமாத்தார்கள் முன்னிலையில்தான் நடைபெற்றது என்றால் சரிதான். பொதுவாக இஸ்லாமிய முறைப்படி மகர் கொடுத்துதான் திருமணம் செய்து கொள்வார்கள் என்றால் சரிதான். எனக்கு மகர் கொடுக்கவில்லை. எனக்கு மகர் கொடுத்தார்கள் என்றாலும் நான் கொடுக்கவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2018 ம் ஆண்டிற்கு முன்பு நான் காவல்நிலையத்தில் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அசாஆ 1 புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான். புகார் மனுவை யார் தயார் செய்தது என்றால் எனது வழக்கறிஞர் சௌந்தரராஜன் தயார் செய்தார். எந்த தேதியில் தயார் செய்தார் என்றால் நான் புகார் கொடுத்த அன்று தயார் செய்தார். வழக்கறிஞர் தயார் செய்து என்னிடம் கையொப்பம் பெற்று கொண்டார் என்றால் சரிதான். புகார் மனு எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை. புகார் மனு நான் சொல்ல சொல்ல தயார் செய்யப்பட்டது.

3. புகார் மனுவில் உள்ள கையொப்பத்தை எங்கு வைத்து போட்டேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. போலிசார் புகார் கொடுத்த பிறகு என்னை விசாரித்தார்களா என்றால் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். போலிசார் எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் எதிரிகள் மேலும் 30 பவுன் கேட்டதாக சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் எதிரிகள் என்னை வக்கத்தவள், வசதியில்லாதவள் என்று டார்ச்சர் செய்ததாக சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் 2 வது எதிரி எனது 10 பவுன் நகைகளை வாங்கி கொண்டதாக சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன்.

4. எனது கணவர் திருமணத்திற்கு முன்பு வெளிநாடு சென்றிருந்தாரா என்றால் சென்றிருந்தார். புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் எந்த தேதி மாதத்தில் 1 வது

எதிரி என்னை ரோட்டில் விட்டு சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் நாத்தனார் தூங்கிய பிறகுதான் நான் தூங்க வேண்டும் என்றும் எனது நாத்தனார் மகன் தூங்க வேண்டும் என்பதற்காக எனது குழந்தை அழக்கூடாது என்றும் , கொல்லைபுறத்தில் என்னை படுக்க வைத்ததாகவும் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மூத்த மகள் எத்தனை வருடமாக எனது மாமியார் வீட்டில் இருந்தார் என்றால் 3 வருடம் இருந்தார். மேற்படி 3 வருட காலத்தில் எனது மகளை அழைப்பதற்கு நான் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல எடுத்தேன். நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் எனது மகளை கேட்டு கேஸ் கொடுத்திருந்தேன். எங்கு எந்த வருடம் கொடுத்தேன் என்றால் சரியாக ஞாபகமில்லை.

5. எனது மகளை எனது முன்னிலையில் விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள். அந்த விசாரணையில் எனது மூத்த மகள் என்னுடன் வர மாட்டேன் என்று சொல்லிவிட்டாரா என்றால் சரிதான். எதிரிகள் அவ்வாறு சொல்லி அழைத்து வந்ததால் அவர் அவ்வாறு சொன்னார். அப்போது எனது மூத்த மகளுக்கு 14 வயது என்றால் சரிதான். அதன் பிறகு எனது மகள் இறந்த பிறகுதான் எதிரியின் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். எனது மகள் இறந்தது பற்றி எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை. நான் எனது மூத்த மகளை டார்ச்சர் செய்ததால்தான் அவர் எனது மாமியார் வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. நான் எனது மகள் இறந்த பிறகுதான் நான் இந்த புகார் அளித்தேன் என்றால் சரிதான்.

6. எதிரி ரோஜாக்கனிக்கு எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். ஆனால் அவர் வீட்டோடுதான் இருந்தார். அவருக்கு திருமணம் ஆனது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2ம் எதிரியை தேரழுந்தூர்

கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றாலும் அந்த விவரம்கூட தெரியாமல் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு 2ம் எதிரி தேரழுந்தூரில்தான் இருந்தார் என்றாலும் அவர் எனது வீட்டில் இருந்தார் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் திருமங்கலக்குடி உப்பு கார தெருவை சேர்ந்தவர் என்றால் சரிதான். 2வது எதிரி என்னை எந்தவித டார்ச்சர் செய்யவில்லை என்றாலும், அவர் எந்த கால கட்டத்திலும் எனது கணவர் வீட்டில் வந்து வசிக்கவில்லை என்றாலும் நான் எனது கணவரின் இறப்புக்கு கூட கலந்துகொள்ளாமல் மூத்த மகள் நோய் வாய்ப்பட்டு இறந்த பிறகு நான் இந்த எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதனடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த புகார் கொடுத்த போது எனது கணவர் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். நான் எதிரிகளிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பிற்பாடு புகார் மனுவை தயார் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வரை எதிரிகள் என்னை அடித்தது சம்மந்தமாக எவ்வித மருத்துவ சிகிச்சையும் எடுத்ததில்லை என்றால் சரிதான். புகார் மனு சொன்ன நாள் நேரத்தில் காவல் நிலையத்தில் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.10.10 10:40:01 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**